# தலைவர் செய்தி

அன்பார்ந்த நண்பர்களே ! வணக்கம்.

### " கனவு மெய்ப்பட வேண்டும் கைவசமாவது விரைவில் வேண்டும்"

தொழில் நடைமுறைகளில் தரமும் வளர்ச்சியும் மிக முக்கியமானவை ஆகும். தொழில் நடைமுறைகள் தொடர்ந்து ஆய்வுக்கு உட்பட்டவைகளாக இருக்க வேண்டும். ஆய்வு முடிவுகளை அமல்படுத்துவதன் மூலம் மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டு தொழில் வளர்ந்துகொண்டே இருக்க வேண்டும். Research and Development என்ற ஆராய்ச்சிகளும், வளர்ச்சிகளும் பெரிய நிறுவனங்களுக்கு மட்டும்தான் சாத்தியமா? நமது சங்க உறுப்பினர் களுக்கும் அது சாத்தியப்படவேண்டும் என்ற நோக்கில் செயல்படுத்தப்பட இருப்பதுதான் வெட்கிரைண்டர்களுக்கான பொதுவாய்ப்பு மையம் ஆகும்.

வெட்கிரைண்டர் தொழிலுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், தொழில் முனைவோருக்கும் தொழிலாளர்களுக்கும் தேவையான புதிய தொழில் நுட்ப பயிற்சிகளை அளித்தல். வெட்கிரைண்டர்கள் மற்றும் உதிரி பாகங்களின் தரத்தினைப் பரிசோதித்து மேம்படுத்தும் வசதிகளை ஏற்படுத்தும் விதமான ஆய்வுக்கூடம் அமைத்தல். தேவையான புதிய தொழில் நுட்பங்களை நமது உறுப்பினர்களுக்கு வழங்கும் வண்ணமாக வியாபர தகவல் மையம் அமைத்தல், முற்றிலும் வெளிமாநிலங்களை நம்பி இருக்கின்ற மூலப்பொருட்களை நமது உறுப்பினர்களே கூட்டாக தயாரிப்பதன் மூலம் தர மேம்பாடு மற்றும் தயாரிப்புச் செலவுகளைக் குறைப்பது போன்ற வசதிகளை உள்ளடக் கியதாக திட்டமிடப்பட்டுள்ளதுதான் நமது பொது வாய்ப்பு மையம்.

இது மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் செயல்படுத்தப்படவிருக்கின்றது. இந்தத் திட்டத்திற்காக ரூ. 279.880 லட்சங்கள் மதிப்பிலான வரைவுத் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. வரைவுத்திட்டம் மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர் மற்றும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரது பரிந்துரையோடு

## பொது வாய்ப்பு மையம்

தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் பரிந்துரையோடு மத்திய அரசின் சிறுதொழில் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வெட்கிரைண்டர்களுக்கான பொது வாய்ப்பு மையத்தின் தமிழக அரசின் பங்களிப்பாக தேவையான இடமும் கட்டிடம் கட்ட ஆகும் மதிப்பில் பாதியும் கோரப்பட்டுள்ளது. மத்திய அரசின் பங்களிப்பாக சிறுதொழில் வளர்ச்சி ஆணையர் மூலமாக ரூபாய் 110 லட்சங்கள் மதிப்பிலான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 90% மானிய உதவியுடன் கோரப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த நமது சங்கத்தின் சார்பில் Special Purpose Vehicle எனப்படும் அமைப்பு ஏற்படுத்தப்பட உள்ளது. SISI, DIC போன்ற மத்திய, மாநில அலுவலகங்கள் மற்றும் NSIC, SIDBI போன்ற அமைப்புகளின் உயர் அதிகாரிகள் அடங்கிய ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழுஅமைக்கப் பட்டு அவர்களது ஆலோசனைகளின் பேரில் செயல்படும்.

இந்தத்திட்டத்தின் திருப்புமுனையாக கடந்த 22.12.04 அன்று நாம் நடத்திய கிளஸ்டர் திட்டத்தின் பங்களிப்போர் கூட்டம் அமைந்தது. சிறப்பாக நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய தமிழக அரசின் சிறு தொழில்துறைச் செயலாளர் மரியாதைக்குரிய திரு. D. **ராஜேந்திரன்** IAS அவர்கள், தமிழக அரசிடம் தேவையான அனைத்து உதவிகளையும் பெற்றுத் தருவதாக உறுதியளித்திருக்கிறார். SISI சென்னை மண்டல இயக்குநர் மதிப்பிற்குரிய **திரு. G.M. அம்போரே** அவர்கள் மத்திய சிறு தொழில் துறை வளர்ச்சி ஆணயத்திடம் வேண்டிய உதவிகளைப் பெற்றுத்தருவதாக உறுதியளித் திருக்கிறார்.

இருவருக்கும் நமது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக்கொள்கிறோம். திட்டம் மிகவிரைவில் மத்திய மாநில அரசுகளின் ஒப்புதலைப் பெற்றுவிடும் என்று நம்புகிறோம். ஒப்புதல் கிடைத்தவுடன் நமது உறுப்பினர்களின் மேலான ஒத்துழைப்புடனும், ஆலோசனைகளோடும் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் இத்திட்டத்தில் பங்குபெற்றுப் பயனடைந்து ஒன்றுபட்டு உயர்வதினால் உண்டாகும் மகிழ்ச்சியே நிலையானது என்பதை மீண்டும் நிலை நாட்ட வேண்டுகிறோம்.

---------------------